தென்மொழி

சுவடி 28

ஓலை 6

விலை :
உருபா 4-00

எந்தவழி கூறீர் எமக்கு!

வானியங்கும் வண்ணக்
கருமுகில்காள் எம்மினத்துக்
கூனிமிர்த்துங் கொள்கைப்
பெருந்திறவோன்-தேனினிய
செந்தமிழ்ப் பாவல
ரேறு பிரிந்து சென்ற(து)
எந்தவழி கூறீர் எமக்கு!

தென்றல் இளங்காற்றே
தேம்பியழும் எங்களுக்(கு)
ஒன்றுரைக்க உள்ளம்
இசைவாயோ - வென்றிகொளும்
செந்தமிழப் போராளி
எம்மைப் பிரிந்து சென்ற(து)
எந்தவழி கூறாய் எமக்கு!

புள்ளினங்காள் நன்று
புகல்வீரோ யாமுவப்பத்
தெள்ளுதமிழ் முப்பால்
திறமுரைக்கும்-ஒள்ளறிவின்
வெந்திற லாளனெமை
விட்டுப் பிரிந்து சென்ற(து)
எந்தவழி கூறீர் எமக்கு!

— இறை

தூய தமிழ் இலக்கியத் திங்களிதழ்

தி.பி. ௨௦௨௭ : ஆடவை 1996 சூன்

வயங்குதமிழ் வளர்ப்பதற்கு வன்முறை இயக்கம் ஒன்று தேவை!

மென்முறையாய் அன்போடும் அறிவோடும்
பன்முறையாய் விளங்க வைத்தும் பயனில்லை
பாழ்மொழியும் பிழைமொழியும் பல்கக் கண்டோம்
மிகச் சொல்லி மேந்தமிழை வளர்க்கும் பாங்கைப்
பன்முறையாய்ச் சொன்னாலும் எழுதி யுண்ணும்
எத்தர்களும் தாளரும் இணங்க மாட்டார்!
வன்முறையாய் இயக்கமொன்று தேவையிங்கே;
வணிகரையும் வம்பரையும் வயக்கு தற்கே!

நற்றமிழில் இல்லாத வணிகர்வரிப்
பலகைகளைப் பெயர்த்தகற்றி நலித்தல் வேண்டும்!
சொற்றமிழில் பிழைசேர்க்கும் கலப்புமொழி
எழுத்தாளர் இல்லங்களைச் சூழ்ந்து நின்று,
முற்றுகையிட டவர்குற்றம் எடுத்துரைப்போம்;
தாளிகைகள் நிலைமாற முறையாய்க் கேட்போம்!
அற்றெனிலவ் வெழுத்துகளைப் புறக்க ணிப்போம்!
தாள்களையும் குவித்தொருங்கே அணல்சேர்ப் போமே!

- பாவலரேறு

சுவடி :18 ஓலை : 9
தி.பி. 2013 மேழம் (ஏப்.-மே '82)

அருட்செல்வி - மதியழகன் திருமணம்

'தென்மொழி'யின் முன்னாள் அமைச்சர் திரு. த. அன்பழகன் மகள் செல்வி அருட்செல்விக்கும், திரு. சி. சின்னதுரை மகன் செல்வன் மதியழகனுக்கும தி. பி. 2027 விடை 14 அன்று (27.05.96) நெல்லை மாவட்டம் வேட்டரம் பட்டியில் பாவலர் ம. முத்தரசு தலைமையில் திருமணம் நடைபெற்றது. மணமக்களை வாழ்த்திப் புலவர் சோமசுந்தரம் பேசினார்.

தென்மொழி மணமக்களை வாழத்துகிறது!

பாவலரேறு
பெருஞ்சித்திரனார் ஐயா அவர்களின்

முதலாண்டு நினைவு நாள்
மற்றும்
நினைவு மலர் வெளியீட்டு நிகழ்ச்சி

நம் அரும் பெறல் ஐயா அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டாகிறது.

அவர்களின் அருந் தொண்டினைத் தொடர்ந்து நாம் செயற்பட வேண்டுமான முனைப்பில் ஐயா அவர்களின் நினைவை ஏந்தும் நிகழ்ச்சியும்,

ஐயா அவர்களின் தனிச் சிறப்பு நிலைகள், கருத்தார்ந்த ஓவிய வரைவுகள் - ஐயாவைப் பற்றி அரசியல் தலைவர்கள், அறிஞர் பெருமக்களின் கட்டுரைகள் உள்ளடங்கி—நினைவு மலர் வெளியீட்டு நிகழ்ச்சியும் நடைபெற உள்ளது.

தென்மொழி அன்பர்கள் அனைவரும் தவறாது வருகை தருக. கொள்ளவும்.

காலம் : தி.பி. 2027, ஆடவை 2 ஞாயிறு (16.6.96)
மாலை 4.00 மணி

இடம் : உலகப் பல்கலைக் கழகப் பணி நடுவம்
(World University Service Centre)
சேத்துப்பட்டு (நெஞ்சக மருத்துவமனை அருகில்),
சென்னை - 31

தலைமை : சொல்லாய்வறிஞர் ப. அருளியார்

வரவேற்புரை : திரு மா. பூங்குன்றன்

தொடக்கவுரை : திருக்குறள்மணி புலவர் இறைக்குருவனார்

மலர் வெளியீடு : உயர்திரு பழ. நெடுமாறன்

மலர் பெறுகை : உயர்திருவாளர்கள்
பாவலர் கடவூர் ப.மணிமாறன்
இரா. திருமாவளவன்
பாவலர் நாவை சிவம்
வழக்கறிஞர் கலைமணி
பாவலர் இளஞ்சித்திரன்
அதியமான்
அ.தெ. தமிழநம்பி
காரடிப்பட்டி கண்ணன்
புலவர் வெற்றிவேந்தன்

நினைவு உரைகள் :
உயர்திருவாளர்கள் ச. விடுதலை விரும்பி
பேரா. தீரன் ச.ம.உ.
பேரா. ம. இலெ. தங்கப்பா
பேரா. கோ. தங்கவேலனார்
முனைவர் ஆறு. அழகப்பன்
முனைவர் இரா. மதிவாணன்
இரா. முத்துக்குமரசாமி க்குமாரசாமி
முனைவர் ந. பிச்சமுத்து
பேரா. இரா. சச்சிதானந்தம்
பெ. மணியரசன்
பாவலர் கோ அப்துல் ரகுமான்
திருவாரூர் தங்கராசு
தியாகு
செங்கம் சபார்
கோவை. கு. இராமக்கிருட்டிணன்
புலவர் த. சுந்தரராசன்
இயக்குநர் சேகர்
நடிகர் தமிழாகரன் (மன்சூரலிகான்)

நன்றியுரை : திருவாட்டி இறை. பொற்கொடி

“கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;” எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

(நிறுவனம் திபி1990 (1959)

நிறுவனர் : பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தென்மொழி

மொழி—இனம்—நாடு

நம்மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களைவிட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனீயப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடையமுடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களின்றும், ஆரியப் பார்ப்பனீயத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே தமிழக விடுதலைதான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

ஆசிரியர் : தாமரை பெருஞ்சித்திரனார்

சுவடி : 28 திபி.உ0உஎ - ஆடவை (சூன் - ‘96) (ஓலை 6)

உறுதியுடன் செயலாற்றுவோம் !

எப்படியேனும் இத்தமிழ் நிலத்தை
முப்படி உயர்த்திடல் வேண்டும் - என்
மூச்சதற் குதவிடல் வேண்டும்!

என்ற உறுதியில் தம் வாழ்நாள் முழுவதும் அயராது முயன்ற நம் அரும்பெறல் ஐயா அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்து துஞ்சுநிலை எய்தி ஓராண்டாகிவிட்டது.

ஐயா அவர்கள் விட்டுச் சென்ற பணிகளை அவர்தம் அடியொற்றித் தொடர உறுதி கொண்ட நாம் ஐயா அவர்களின் கண்ணொளியாகவும் மூச்சுயிர்ப்பாகவும் விளங்கும் தென்மொழிப் பணியைத் தொடர்கின்றோம்.

ஐயா அவர்களின் அரும் பேரிலக்கியமான நூறாசிரியம் தென்மொழியில் ஒரு பகுதி மட்டும் வெளிவந்து மறுபகுதி உரை எழுதி வெளியிடப்படவேண்டிய நிலையில் இருந்ததனை

- நிறைவு செய்து பொலிவுற அச்சிட்டு வெளியிட்டுள்ளோம்.

சென்னை - மேடவாக்கத்தில் ஐயா அவர்கள் துஞ்சும் இடத்தில் அடக்கமேடை அமைக்கவும், காட்சிக்கூடம், நூலகம், அரங்க மண்டபம் ஆகியவற்றுடன் கூடிய கட்டடம் எழுப்பவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுப் பணிகள் நடைபெறுகின்றன.

ஐயா அவர்களின் உயிர்மூச்சான தமிழ் - தமிழின மேம்பாட்டுக்குரிய முயற்சிகளை மேற்கொள்ளவும், அத்தகைய முயற்சிகள் மேற்கொண்டுவரும் பல்வேறு அமைப்புகளை ஒருங்கிணைத்துச் செயற்படவும் தமிழ்க்களம் நிறுவி அதற்கான அடிப்படை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 'பாவலரேறு பெருஞ்சித்திரனார் அறக்கட்டளை' அமைக்கப் பெற்றுப் பணிகள் தொடர்கின்றன. '

அறக்கட்டளைக்கான பொருள்தண்டும் முயற்சிக்காக மாவட்டந்தோறும் தென்மொழி அன்பர்கள் குழு அமைக்கப்படிருப்பதோடு பல்வேறு இயக்கங்களின் தலைவர்களையும், பிறரையும் கண்டுவருகிறோம்.

தென்மொழி அவையத்தின் சார்பில் மதுரையிலும் திருச்சியிலும் 'பாவலரேறு சிறப்பியல் கருத்தரங்கம் - பாவரங்கம்' நிகழ்ச்சிகள் நடத்தப் பெற்றிருக்கின்றன. ஆங்காங்குள்ள தென்மொழி அன்பர்கள் அவைய நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றனர்.

ஐயா அவர்களின் முதலாண்டு நினைவுநாளை யொட்டிப் 'பாவலரேறு பெருஞ்சித்திரனார் நினைவுமலர்' சிறப்புற உருவாக்கப்பெற்று நினைவுநாள் நிகழ்ச்சியில் வெளியிடப்பெறுகிறது.

இவ்வகையில் ஐயா அவர்களின் மொழி, இன, நாட்டுரிமைக் கொள்கைகளை நம்மேல் போட்டுக் கொண்டு உறுதியுடன் செயலாற்றுவதே நம் கடமை. அக்கடமைக்கான செயல் முயற்சியே நம் ஐயா அவர்களை நினைவு கூர்வதற்குரிய உண்மையான பொருளாகும்!

- இறை

மேலும் கீழும்

பாவலரேறு

மேலே போகப் போகத் தனிமைதான்!
கீழே வர வரக் கூட்டந்தான்!
அறிவிலோ, அன்பிலோ, செல்வத்திலோ, இடத்திலோ,
காலத்திலோ - இந்த இலக்கணத்தைத் தான் இயற்கை
நமக்கு வகுத்துத் தந்திருக்கிறது!
அந்த இயற்கையாற்றலும் மேலே போகப் போகத்
தனிமையில் தான் இருந்து இயங்க வேண்டியிருக்கிறது!
ஒருவன் அறிவில் ஈடுபட ஈடுபட அவனுக்குக் கூட்டம்
கசக்கிறது! இடையூறாய் இருக்கிறது.
அதேபோல் ஒருவ்ன் அன்பைத் தூய்மையாக நாட நாட
அவனும் தனிமையைத்தான் நாடவேண்டியுள்ளது!
அறிவு தனிமைப் படுத்துகிறது!
அன்பை உணர்கிறவனும் தனிமைப்பட்டுப் போகிறான்!
அறிவில் மேல் என்பது அறிவுக் கூர்மையை உணர்த்தும்
அன்பில் மேல் என்பதும் அன்பில் தூய்மையை உணர்த்தும்
மேலறிவு என்பது மெய்யறிவு வரை நீண்டு இறைமை
உணர்வுடன் ஒன்றிச் செயலறுகிறது!மேலான அன்பு என்பதும்
மக்கள் தொண்டில் நீண்டு முழுமை பெற்று இறைமை
உணர்வுடன் ஒன்றிச் செயலறுகிறது!

மேலும் கீழும் ஒன்றுதான்!

இரண்டும் பரந்தும் கூர்த்தும் செல்கின்றன!
உலகியல் பொருள்களான செல்வம் (பொருள்) இடம், காலம்
ஆகிய மூன்றிலும் ஒருவன் மேலே மேலே போகப் போகத்
தனிமைப்பட்டே போகிறான்!

நிறைந்த செல்வன், அல்லது பொருளுடைமையாளன்
தான் திரட்டிய முழுப் பொருளையும் தனியே துய்த்துத் தீர்க்க

---

* தென்மொழி அச்சகத்தில் பாவலரேறு ஐயா அவர்களின் கைமெழுத்துப் படி கோப்பிலிருந்து எடுக்கப் பெற்றது.

இயலாமற் போனாலும், பிறர் அதைத் தாறுமாறாகத்
துய்க்க இடந்தராமல், தனிமைப்பட்டே அழிகிறான்!
அவனுடன் அவன் ஈட்டிய பொருளும் அழிகிறது!

இட நிலையில் மேல் என்பதும் கீழ் என்பதும் ஒன்றுதான்
எனினும், உலகந்தழுவிய இட நிலையில், மேல் என்பது
விசும்பளாவிய வான்பரப்பை நோக்கியதும், கீழ்
என்பது நிலவுலகின் உள்நோக்கியதும் ஆன பொருள்களைத் தரும்.

குன்றம், மலைமுகடு, வான் வெளி இவற்றை
மேலே என்று கொண்டால், அவ்விடங்களிலும்
அவ்வவ் வுணர்வு நிலைகளும் இருப்பு நிலைகளும்
தனிமைப்பட்டே போகின்றன!

காலம் என்னும் நிலையில் மேல் என்பது ஒன்றின் இறுதிக் காலத்
தையும், கீழ் என்பது ஒன்றின் தொடக்கக் காலத்தையும்
குறிப்பனவாகும்!

இனி, எதிலும் ஆழ ஆழவும், எம்ப எம்பவும் அமைதி,
அமைதிதான்! அஃதாவது தனிமை தனிமைதான்!

அஃதாவது இன்னும் விரிவாகவும் விளக்கமாகவும்
சொன்னால் மேலும் அமைதி அல்லது தனிமைதான்!
கீழும் அமைதி அல்லது தனிமைதான்!

எனவே, ஒருவன் தனிமையாக இருக்க விரும்புகிறான்
என்றால், அவன் மேலே போகவோ, கீழே இறங்கவோ
உணர்வு பெற்று விட்டான் என்பதே பொருள்!
ஆனாலும் மேலே போக விரும்புபவனைக் கீழே இழுக்காதீர்கள்!
கீழே இறங்க விரும்புபவனை மேலே ஏற்ற விரும்பாதீர்கள.
அ்து அ்து அவரவர் விருப்பமும் உள்ளுணர்வும் ஆகும்!

இன்னுஞ் சொன்னால் முடிவும் ஆகும்!

நிலமும் வானமும் ஒன்றுதான்!

ஆனால் அவை வேறு வேறாகவே இருக்க வேண்டும்!
அவை அவை அவையாக இருப்பதே இயற்கை!
ஒன்றை மற்றொன்றாகச் செய்ய வேண்டுவதில்லை!
அஃது அறியாமை!
இயற்கைத் தடை!

தென்மொழியின் தொடர்பு

- பேரா. ம.இலெ. தங்கப்பா

(அண்மையில் வெளிவந்த 'நிகழ்' இதழில் இடம் பெற்ற பேரா. ம.இலெ. தங்கப்பா அவர்களது நேருரையின் ஒரு பகுதி)

எனக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்தே எனக்குள் இறை நம்பிக்கையும், பற்றும் நிறைந்த கிறித்துவச் சூழலில்தான் நான் வளர்ந்தேன். என் அன்னையார் மிகுந்த இறை நம்பிக்கை உடையவர். இன்றும் கூட எங்கள் குடும்பத்தில் - உறவினர்களில் - பலர் ஆழ்ந்த கிறித்துவ சமயப் பற்றினராகவும் சமயப் பணி மேற்கொண்டவராகவும் உள்ளனர். என் தந்தையார் ஒருவரே நெறிவிலக்கு அவரிடத்திலும் இரண்டு தன்மைகள் இருந்தன. அவர் விவிலிய நூல் ஆராய்ச்சியாளர்; அதேபொழுது பெரியாரியத்தில் ஈடுபாடு கொண்ட பகுத்தறிவாளர். வாழ்க்கையை விளங்கிக் கொள்ளும் நிலையில் இறையுண்மை பற்றிய தேடல் உடையவராகவும், மத அமைப்புகள் கருத்துகளைப் பொறுத்தவரை கடுமையான மத மறுப்பாளராகவும் இருந்தார். இப்பொழுது நானும் அப்படித்தான் இருக்கின்றேன். ஆயினும் தொடக்கத்தில் நான் முழு இறைமறுப்பாளனாகவே இருந்தேன். 'தென்மொழி' ஆசிரியரின் தொடர்புக்குப் பிறகு இப்புடவியின் தோற்றத்துக்குப் பகுத்தறிவு கூறும் விளக்கத்தின் போதாமையை உணர்ந்து என் தேடலை வேறு பக்கம் திருப்பினேன்.

இன்றும் என்னுள் சமய மரபு சார்ந்த நம்பிக்கை சிறிதும் இல்லை. முழுமையான மத மறுப்பு, மரபு சார்ந்த இறைப்பற்றின்மை, இறை வழிபடாமை ஆகியவற்றால் கடுமையான இறைமறுப்பாளனாகவே இருக்கின்றேன்.

ஆயினும், உலகப் படைப்பின் புரிய வொண்ணாப் பெரும் புதிர்கள், அறிவுக் கெட்டா, வியத்தகு அறிவியல் உண்மைகள், வாழ்வின் நுண்மைகள், ஐம்புலன் கடந்த உணர்வுகள் போன்றவை பகுத்தறிவின் அளவு கோலுக்கு அடங்குவன அல்ல. மாந்த மூளையின் சிறுபிள்ளைத்தனமான கண்டுபிடிப்புகட்கும் அவற்றின் மறுப்புக்கும் அப்பால், கால இட அளவைகட்கு அகப்படாமல், சிறிதும் ஒழுங்கு பிறழாமல் இயங்கி வரும் இயற்கைப் பேரியக்கத்தின் முன் ஒன்றுமற்று

நிற்கும் மாந்தனின் சிறுமையை நன்கு உணர்வதால், இச்சிறுமையின் எல்லைக்குள் நின்று எந்த முடிவுக்கும் வராமல், இயற்கையின் வியப்பில் திளைத்து மூழ்கி, இயற்கையின் ஒவ்வொரு பொருளிலும் துகளிலும் தூய்மையை (புனிதத்தை) இறைமையாக உணர்ந்து, வாழ்தல் ஒன்றே வழிபாடாகக் கொண்டு வாழ்ந்து வருகிறேன் என்னலாம்.

மதத்துக்கு எதிரான எண்ண ஓட்டங்கள் என்னுள் தோன்றியமைக்குக் காரணம், அமைப்புக்குட்பட்ட மதமோ, அது கூறும் இறை வழிபாடோ மாந்தன் மாந்தனாக வாழத் துணைபுரியவில்லை என நான் உணர்ந்திருப்பதுதான். மதம் என்ற ஒன்றை ஏற்றுக் கொள்ள வேண்டுமானால், அதன் சாரம்-அருட்பெருஞ் சான்றோர்களின் வாழ்வியல் தெளிவு-மாந்தன் தன் சிறுமைகள், கீழ்மைகள் யாவும் அகன்று முழு நிறை மாந்தனாக வாழ்தல் வேண்டும் என்பதுதான். மத நம்பிக்கையும் இறை வழிபாடும் தவறாமல் கடைப்பிடிக்கும் மிகப் பலர் - ஏன் வழிகாட்டும் மதத் தலைவர்கள் என்பவர்கள் கூட, மிகச் சிறிய மாந்தராகவே இருப்பதைப் பார்த்திருக்கிறேன். அவர்கள் செய்யும் வழிபாடும், அவர்களின் நம்பிக்கையும் கடைசிவரை அவர்களின் உள்ளச் சிறுமையை அகற்றத் துணை புரிவதில்லை. எனவே மாந்தன் நல்லியல்புகள் வாய்க்கப் பெற்றவனாக, உள்ளச் செழுமை உடையவனாக - அன்பும், அழகும், அருளும் உடையவனாக-மாந்தப் பண்பு கனிந்தவனாக வாழத் துணைபுரியாததும், மாந்தனின் கோணல் கட்கும் அச்சங்கட்கும் தெளிவின்மைக்கும் உட்பட்டதுமான மதம் மதமாகாது. கடவுள் கடவுளாகாது. அவற்றைத் தூக்கி எறிவதில் எந்தப் பிழையும் இல்லை என்று உறுதியாகக் கூறுவேன்.

தென்மொழி ஆசிரியர்க்கும் எனக்கும் பல கருத்தொற்றுமைகள் இருந்தன. தமிழ், தமிழின மறுமலர்ச்சி போன்றவற்றில் இருவர்க்கும் ஒரே தன்மையான ஈடுபாடு இருந்தது. இன்னும் பலவற்றை என்னினும் தெளிவாக அவர் பார்த்தார். அவரால் எனக்குப் பல செய்திகளில் தெளிவு கிட்டியது. அதோடு, அவர் என்மீது மிகுந்த அன்பு கொண்டிருந்தார். நானும் அவர் மீது அன்பு உடையவனாக இருந்தேன். ஆனால் எங்கள் இருவர் இயக்கத்திலும் அடிப்படையான வேறுபாடு இருந்தது.

தென்மொழி ஆசிரியர் பல்துறை ஈடுபாடுகளும் ஆற்றல்களும் வாய்க்கப் பெற்றவராக இருந்தும், தமிழின விடுதலையைத் தம் வாழ் பணியாகக் கொண்டிருந்தார். தம்மை முழுமையாக அந்நோக்கத்துக்கே ஒப்படைத்துக் கொண்டார். ஒரு குறிக்கோளை நோக்கி வினையாண்மையுடன் எந்திரமாய்ச் சுழன்றது அவர் இயக்கம். அது ஒரு நடுப்புள்ளியைச் சுற்றி சுழன்ற இயக்கம் என்பேன். அமைப்புக்கள் நிறுவனங்களின் வினைப்பாடுகளாக உலகில் இதுவரை நடந்திருக்கும் எல்லா

இயக்கங்களும் நடுப்புள்ளி சார்ந்த இயக்கங்களே. ஒரு குறித்த நோக்கத்தை நிறைவேற்ற, பயனை விளைவிக்க, அவை பயன்பட்டன; படுகின்றன. இத்தகைய இயக்கங்களில் இலக்கு முதன்மையாகின்றது; வழி முதன்மையாவதில்லை.

தொடக்கத்திலிருந்தே தமிழ் மறுமலர்ச்சிப் பணிகளில் நான் ஆர்வமுடன் ஈடுபட்டு வந்தபொழுதும் பிறவற்றினின்று அவற்றைத் தனிப்படுத்திக் கொள்ளாமல் செய்யத்தக்க பலவற்றுள் ஒன்றாகவே அதனைக் கண்டேன். முழுதளாவிய வாழ்க்கை மலர்ச்சியின் ஒரு கூறாகவே தமிழ் மறுமலர்ச்சி என்னை ஈர்த்தது. என் இயக்கம் நடுப்புள்ளி அற்ற இயக்கமாய் நின்றது. ஓர் இலக்கை நோக்கிய முற்செலவன்று அது. இலக்கே அற்ற வாழ்க்கை விழிப்புணர்வு என்பேன். அதில் சிறிது, பெரிது, உயர்வு, தாழ்வு, முதன்மையானது, முதன்மையற்றது என்றெல்லாம் முரண்கள் இல்லை. ஒன்றைப் புறக்கணித்து மற்றொன்றை முன்னிறுத்தும் தன்மை அதற்கில்லை. அது அது அதன் அதன் அளவில் மலர்தல் வேண்டும் என்று நான் எண்ணினேன். ஒரு குறிப்பிட்ட கால, இட எல்லைக்குள் எங்கள் இருவர் இயக்கமும் வேறு வேறாயிருந்தன. அவர் எல்லாவற்றையும் உணர்ந்திருந்தும், தெரிந்திருந்தும் தாமாகவே தம்மைச் சில கட்டுக்குள் புகுத்திக் கொண்டார். எந்தக் கட்டுக்குள்ளும் அகப்படாமை என் இயல்பாயிருந்தது. அவர்தம் இயக்கம் ஒளிக் குவியலாகவும் என் இயக்கம் ஒளிச் சிதறலாகவும் இருந்தன. இரண்டும் ஒன்றுபட முடியாதன்றோ?

நான் தென்மொழியின்று விலகியமைக்குக் காரணமான புற நிகழ்ச்சிகள், சூழல்கள் எல்லாமே இந்த அடிப்படை வேறுபாட்டின் வெளிப்பாடுகளாகவே இருந்தமையால் அவற்றை விரித்துச் சொல்லத் தேவையில்லை. அவற்றால் எந்த ஆக்கமும் விளையப் போவதில்லை.

- பாவலரேறு ஐயா அவர்களின் அரிய படைப்பிலக்கியம்.
- செறிவுறு பாக்களொடு விரிவுறு விளக்கங்களையும் உடன் கொண்டது.
- செம்மையான பதிப்பு

நூறாசிரியம்

விலை : உரு : 100.00

பதிவஞ்சலில் பெறவிரும்புவோர்

உரு 115 (நூற்றுப்பதினைந்து மட்டும்) விடுக்க.

தொடர்புக்கு :

தென்மொழி நூல் வெளியீட்டு விற்பனையகம்

5, அருணாசலத் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.

தமிழ் அரிமாவோடு அந்தச் சில நாட்கள்

- தாராபுரம் ஆறுமுகம்

தனித் தமிழ் அரிமா பாவலரேறு ஐயா அவர்கள் இன உணர்வாளர்களை அடக்கும் கொடிய சட்ட்மாம் 'தடா' சட்டத்தின் கீழ்த் தளைப்படுத்தப்பட்டுச் சென்னை நடுவண் சிறையில் 7 மாதங்கள் இருந்தார்கள். அவர்களோடு நடுவண் சிறையில் நெருங்கி இருக்கக் கூடிய வாய்ப்பு எனக்குக் கிட்டியது.

திரைப்படப் பாடல்களையே பாடிப் பழக்கப்பட்ட சிறையிலே அடக்கு முறைக்கும் ஒடுக்குமுறைக்கும் எதிராக அஞ்சாமல் அணி திரளும் இன உணர்வை அரத்த நாளங்களிலே பதிக்கும் புரட்சிப் பாக்களும் ஐயா அவர்களின் வருகைக்குப் பின்தான் ஒலிக்கத் தொடங் கின. கருங்கல் சுவரும், களிவண்ணச் சட்டையும், கம்பிக் கதவுகளும் நடுங்கத் தொடங்கின. "'தடா' எம்மை என்ன செய்யும் 'தடா' எம்மை என்ன செய்யும் தடா தகைப் பிராட்டியே!" என்ற ஐயா அவர்களின் பாடல்களை பாடியே மூன்றாண்டுகளை மூன்று மாதங்களாகக் கழித்தோம். வெற்றுக் கூச்சல்களும் வீண் வம்புகளும் விளையாட்டுப் போக்குகளும் குறைந்தன. விடியலுக்கு வித்திட்ட வகுப்புகள் நடைபெற் றன. சிறையாக இருந்தாலும் சிக்கனத்தைக் கடைப்பிடிக்கக் கற்றுக் கொண்டோம். அடக்கு முறைக்கும், ஒடுக்கு முறைக்கும் எதிராகப் போர் தொடுத்தோம். புது வாழ்வு வாழ்ந்தோம்.

ஒரு சமயம் ஐயா அவர்கள் என்னை அழைத்துப் பக்கத்து அறையில் போய் இருக்கும்படி சொன்னார். அதன்படி போய் இருந்தேன். மீண்டும் அழைத்தார். "தம்பி! வேறுபாடான ஒலி ஏதும் உங்களுக்குக் கேட்டதா?" என்றார். "ஆமாங்கய்யா. ஏதோ... நடக்கும் ஒலி போல் கேட்டது என்றேன்." சரி மீண்டும் போய் நில்லுங்கள் என்றார். மீண்டும் போய் நின்றேன். "இப்போது வேறுபாடான ஒலி கேட்டதா?" என்றார். "இல்லை" என்றேன். "சரி வாருங்க,. உட்காருங்கள்;" என்றவர். "தம்பி நான் அதிகாலை நான்கு மணிக்கு எழுந்து உடற்பயிற்சி செய்கின்றேன். அப்போது கால்களை மேலும் கீழும் தூக்கி வைக்கின்றேன். நிலத்தில் பாதங்கள் படும்போது அந்த ஒலி பக்கத்து அறைக்குக் கேட்கின்றது. அந்த நேரத்தில் அவர் அயர்ந்து தூங்கிக் கொண்டு இருப்பார். இதனால் அவருக்கு இடையூறாக

இருக்கலாம். இதை அவர் நம்மிடம் சொல்ல முடியாமல் கூட இருக்கலாம். மனத்தளவில் கூட அவர் நம் மீது வருத்தப்பட்டு விடக்கூடாது. அதனால் கீழே சாக்கைப் போட்டு உடற்பயிற்சி செய்யும் போது ஒலி பக்கத்து அறைக்குக் கேட்பதில்லை. அதனால் இனிமேல் நாம் சாக்குப் போட்டே உடற்பயிற்சி செய்து கொள்வோம். அப்படிச் செய்யும்போதும் ஒலி கேட்குமானால் நாம் உடற்பயிற்சி செய்வதையே நிறுத்திவிடலாம். அதனால் இழப்பு நமக்குத் தான். எக்காரணம் கொண்டும் அவருக்கு இடையூறு ஏற்பட்டு விடக்கூடாது" என்றார்.

சிறை அதிகாரிகள் சிறையாளிகளிடம் மிகவும் கெடுபடியாக நடந்து கொண்டனர். ஒரு நாள் மின்சாரம் தடைப்பட்டு மாலை 6 மணி வரையிலும் வரவில்லை. சிறையதிகாரிகளும் எங்களை அடைப்புக்குப் போகும்படி வற்புறுத்தினர். ஐயா உள்பட நாங்கள் எல்லாரும் அடைப்புக்குப் போகமுடியாது எனக் குரல் எழுப்பினோம். சற்று நேரத்திற்குப் பிறகு அடைப்புக்குப் போகலாம் எனச் சிலர் சொன்னார்கள்: இதை ஐயா அவர்களிடம் சென்று சொன்னேன். "ஐயா இங்கே சில சலுகைகளை நாம் பெற்று வருகின்றோம். ஆகவே நாம் கொஞ்சம் தணிந்து போக வேண்டி இருக்கிறது. இதனால் அடைப்புக்குப் போகலாம் என்கிறார்கள்" என்றேன். "என்ன தம்பீ! அட, சலுகைகள் கொடுக்கின்றானா? முறையாக நமக்கு என்ன கிடைக்க வேண்டுமோ அதுவே கிடைப்பதில்லை. இதிலே போய்... நாம் என்ன சலுகைகள் பெறுகின்றோம்? அப்படி சலுகைகள் கொடுப்பதாக இருந்தால் நிறுத்திக் கொள்ளட்டும். அதற்காக நம் உரிமைகளைப் பெறப் போராடாமல் இருக்க முடியுமா? தம்பீ, யார் அடைப்புக்குப் போகின்றார்களோ போகட்டும்; நாம் இன்று மின்சாரம் வராமல் அடைப்புக்குப் போவதில்லை" என்றார் ஐயா. அம்முடிவின்படி அன்று மின்சாரம் வந்த பின்புதான் அடைப்புக்குப் போனோம்.

ஒரு சமயம் வழக்கறிஞர் வந்து "பிணையல் இப்போது கிடைக்காது. வேண்டுமானால் இடைக்காலப் பிணையல் பத்து நாள் வாங்கலாம்" என்றும் "பிறந்த நாளுக்கு வேண்டுமானால் வீட்டுக்குப் போய் வர இசைவு வாங்கலாம்" என்றும் கூறினார். ஐயாவோ, "பிறந்தநாளும் வேண்டாம், ஒரு மண்ணாங்கட்டியும் வேண்டாம். யாராவது சொல்கின்றார்கள் என்று கேட்டு அருள் கூர்ந்து இந்த மாதிரியான வேலைகளில் ஈடுபட்டு விடாதீர்கள். மேலும் தனித்தமிழ் நாடு கேட்கவில்லை என்று சொல்லி எந்த நிலையிலும் பிணையல் கேட்டு விடாதீர்கள். நான் பிள்ளைகளோடு நலமாக இருக்கின்றேன்" என்றார்.

பாவலரேறு பெருஞ்சித்திரனார் - ஒரு மதிப்பீடு

- குமரி மைந்தன்

அண்மையில் வாழ்வு நிறைவினை எய்திய பாவலரேறு பெருஞ் சித்திரனார் தமிழக உணர்வுடைய நெஞ்சங்களில் எவ்வளவு இடம் பிடித்திருந்தார் என்பதற்கு அவரது இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்ட பெருந்திரளும் ஆங்காங்கே தோழர்கள் ஒட்டிய இரங்கல் சுவரொட்டிகளும் கூட்டங்களும் சான்று கூறின. ஆனால் இவ்வளவு பெருந்திரளான ஆர்வலர்களை ஈர்த்து வைத்திருந்த பாவலரேறு அவர்களால் தம் வாழ்நாளில் தமிழார்வம் மிக்குடையவர்களைத் தவிர்த்த பிறரிடையில் ஓர் அறிமுகம் என்ற அளவில் கூடப் பரவலாக அறியப்படால் போனது ஒரு பெரும் கேள்வியாக நிற்கிறது.

மக்களிடையில் இயக்கங்கள் முகிழ்த்தெழுவதற்கு அவற்றைத் தொடங்குவோரின் தனித்த பொருளியல், வாழ்வியல் நோக்கங்கள் காரணமாயிருப்பதில்லை. அவர்களால் உயர்ந்தனவாகப் புரிந்து கொள் ளப்படும் நோக்கங்களிலிருந்தே அவை தோற்றம் பெறுகின்றன.

அந்த வகையில் பாவலரேறுவின் பொது வாழ்வின் தொடக்கம் தமிழ் மொழித் தூய்மை குறித்ததாகும். அதனாலேயே அவர் பாவாணரைத் தம் ஆசானாக ஏற்றுக் கொண்டார்.

தமிழ் மொழியின் உரிமை இந்தி ஆட்சி மொழிச் சட்டத்தால் அச்சத்துக்குள்ளான போது தம் எதிர்கால வாழ்வைப் பற்றிய சிந்தனையையே உதறி எறிந்து விட்டு மொழிப் போராட்டத்தினுள் நுழைந்தார்.

சமற்கிருத மொழிக் கலப்பு மட்டுமன்று ஆங்கிலம் உட்பட அனைத்து மொழிக் கலப்புகளிலுமிருந்து தமிழை மீட்கும் போர்ப் படையாக 'தென்மொழி'யை வளர்த்தார். அந்தத் தொடக்க காலத்தில் 'தென்மொழி' மூலம் தமிழகத்திலுள்ள பல்துறை அறிஞர்களின் ஆற்றல் வெளிப்பட்டது. அவர்களின் படைப்புகள் தனித் தமிழின் பன்முனை ஆற்றலைத் தமிழார்வலர்களிடம் விளங்க வைத்தன. தனித் தமிழின் மீது அவை பெரும் தன்னம்பிக்கையையும் ஊக்கத்தையும் ஏற்படுத் தின. 'தென்மொழி' மூலம் வெளிப்பட்ட பாவாணரின் சொல்லாய்வு உத்திகள் பலரிடம் புதிய சொல்லாக்கத் திறனைப் படைத்தன. அந்தக் காலத்தில் 'தென் மொழி' வெளிப்படுத்திய அந்த ஆற்றல் அளப்பரி யது.

தமிழ் மொழி மீட்சி என்ற நோக்கத்தினடியாகப் பிறந்ததுவே தமிழக விடுதலை என்ற பாவலரேறு அவர்களின் குறிக்கோள் ஆகும். அப்போது அவருடனிருந்த எண்ணற்ற இளைஞர்களின் கனவாகவும் அது உருப்பெற்றிருந்தது. ஆனால் மக்கள் விடுதலை என்பது எவ்வளவு கடுமையான பணி, அதற்கு எத்தகைய பின்புலம் உருவாக்கப்பட வேண்டும். மக்கள் மனத்தில் ஆர்வத்தை எழுப்புவதற்கு என்னென்ன செய்ய வேண்டுமென்ற சிந்தனையை விட, கட்டுப்படுத்த முடியாத தம் ஆர்வத்தையே வலிமையாக்கி 1972-இல் மதுரையில் தமிழக விடுதலை மாநாடு நடத்தித் தளைப்பட்டார். மாநாட்டின் விளைவாக அவருடனிருந்த இளைஞர்களில் பலர் அகன்றனர்.

பாவலரேறுவின் அணியில் முற்றிலும் தனித்தமிழ் ஆர்வம், தமிழக விடுதலை வேட்கை ஆகியவற்றை மட்டுமே உள்ளுணர்வாகக் கொண்டோர் மட்டும் திரளவில்லை. கல்லூரிகளில் தமிழ்ப் பேராசிரியர்களுக்கு அன்று இருந்த இரண்டாம் தர நிலையாலும் தங்களுக்கு வேலைவாய்ப் பற்றிருப்பதாலும் வெறுப்புற்றிருந்த தமிழ் இலக்கியம்-முதுகலை பயின்ற இளைஞர்கள் எண்ணற்றோர் இணைந்தனர். இந்த நிலையில் கல்லூரித் தமிழாசிரியர்கள் பிறதுறை ஆசிரியர்களைப் போலவே முதல்வராவதற்குச் சமத் தகுதியுள்ளவர்களாக்கப்பட்டனர். ம.கோ.இரா. ஆட்சிக் காலத்தில் பல புதிய பல்கலைக் கழகங்கள் தொடங்கப்பட்டன. தமிழ் வளர்ச்சி, தமிழாய்வு என்ற பெயர்களில் நிறுவனங்களும் உருவாயின. இவற்றால் ஏற்பட்ட எண்ணற்ற பணியிடங்களில் வேலையற்றிருந்த தமிழ் இலக்கிய முதுகலைப் படிப்பாளிகளுக்கு வேலை கிடைத்தது. இயல்பாகவே இவர்கள் இயக்கத்திலிருந்து விலகி விட்டனர். தனித் தமிழ் இயக்கம் மொழியைப் பொறுத்தவரை ஆட்சியாளர்களைக் குறை கூறும் ஓர் அரசியல் இயக்கத்தின் தன்மையைப் பெற்றிருந்ததால் சிலர் தனித் தமிழ் இயக்கத்தோடு தமக்கு உடன்பாடில்லை என்று காட்டுவதற்காகத் தனித் தமிழுக்கு எதிரான நிலையைக் கூட எடுத்தனர். இது பாவலரேறு அவர்கள் மனத்தைப் புண்படுத்தியது. எனவே "பணம் படைத்தவர் நலனையே நாடுவதாக என் கடந்த கால நடவடிக்கைகள் அமைந்து விட்டன. இனி ஏழை மக்களின் நலன் பற்றிச் சிந்திக்கப் போகிறேன்" என்று ஒரு கட்டத்தில் கூறினார். இந்தக் கட்டத்துக்குப் பின் அவர்கள் பொதுமை என்ற நோக்கத்தை முன் வைத்தார். பொதுமைக் கோட்பாடுகளைக் கரைத்துக் குடித்தவர்கள் கூடத் திசை தெரியாது மயங்கிச் சோர்ந்து நிற்கும் இன்றைய நிலையில் பாவலரேறு அவர்களால் இந்தத் திசையிலும் எந்தத் தடத்தையும் பதிக்க முடியவில்லை.

இன்னொரு பக்கம் தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதி மீது பாவலரேறு வைத்திருந்த அளவிலாப் பற்று தம்மை பின்தொடர்ந்

தோரை மனம் வருந்த வைத்தது.

பெரியார், அண்ணாதுரை, கருணாநிதி ஆகிய தலைவர்கள் அனைவருமே தமிழுக்கும் தமிழகத்துக்கும் அதன் மக்களுக்கும் இரண்டகம் செய்துவிட்டனர். எனவே புது இயக்கம் அமைத்துப் புதுப் பாதை காண்போம் என்று புறப்பட்டவர் அவர். அப்படியாயின் ஏன் மீண்டும் மீண்டும் கருணாநிதியின் பின் நின்று கொள்கிறார் என்ற கேள்விக்கு இறுதி வரையிலும் யாராலும் விடை காணமுடிய வில்லை.

பெருஞ்சித்திரனாரின் பின் அணி வகுத்தவர்களில் பெரும் பாலானவர்கள் இறை மறுப்பாளர்கள். பெருஞ்சித்திரனாரோ அவருக்கே உரித்தான ஓரிறைக் கொள்கை ஒன்றை வைத்திருந்தார். இந்த முரண்பாட்டைக் கூடப் பெரிதாக எண்ணாமல் தமிழ், தமிழகம், தமிழக மக்களின் நலன் என்ற குறிக்கோளில் அவரது வழிகாட்டலை எதிர்நோக்கியிருந்தவர்களுக்கு இந்த முரண்பாடு தாங்கிக் கொள்ளத் தக்கதாயில்லை. அதுவும் கருணாநிதி-ம.கோ.இரா. பிரிவின்போது பலர் மனங் கசந்தனர். இதனால் பலருக்குப் பாவலரேறு அவர்களின் நேர்மை, நாணயம் ஆகியவற்றின் மீதே கூட ஐயுறவு ஏற்பட்டு விட்டது. ஆனால் இறுதிக் காலம் வரை எவரது துணையையும் நாடாது தனித்து நின்றே போராடித் தம் வாழாநாளையே தேய்த்துக் காட்டி அனைத்து ஐயப்பாடுகளினின்றும் நீங்கிப் பெருமை பெற்றுவிட்டார்.

மொழி ஞாயிறு பாவாணர் அவர்கள் தம் உயிர் மூச்சாகக் கருதிய செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகர முதலி உருவாக வேண்டுமென்ற தணியாத வேட்கையில் 'தென்மொழி' வாயிலாகப் பாவலரேறு அவர்கள் மேற்கொண்ட அரிய முயற்சியின் பக்க விளைவே அரசு அத்திட்டத்தை ஏற்றுக் கொண்டது. ஆனால் பாவாணர் இறைவன் இப்பணிக்காகவே படைத்துள்ளதாகவும் எனவே அப்பணி முடியாமல் தம்மைச் சாக விடமாட்டான் என்றும் கொண்ட தவறான நம்பிக் கையாலும் தம் குடும்பத்தாரின் நெருக்குதல்களை நிறைவேற்ற வேண்டியும் அகரமுதலிப் பணியில் சுணக்கம் காட்டிய போது பாவலரேறு தம் அன்புக்கும் மதிப்புக்குமுரிய ஆசானைக் கடிந்து கொள்ளத் தவறவில்லை. ஆனால் அவரது சொல்லாய்வு நெறிகளி லிருந்து தாம் மாறுபடுவதாகத் தெரிவித்த கருத்துகள் அத்துறையில் அவரது ஆழமின்மையையே காட்டின. இருப்பினும் குறிக்கோளில் அவருக்கிருந்த இறுக்கமான பிடிப்புக்கு அது ஒரு சான்றாக அமைந் தது.

இப்போது 'தென்மொழி' அரசியல், குமுகியல் மட்டுமே கூறும் இதழாகத் தன் முகப்பைச் சுருக்கிக் கொண்டது. அத்துடன் தேசியம்

என்பதன் நிலம் சார்ந்த இயல்பைப் புரிந்து கொள்ளாமல் தமிழ் பேசும் உலக மக்களனைவரையும் ஒரு தேசியமென்று கருதி உலகத் தமிழின முன்னேற்றக் கழகம் அமைத்து அதன் கொள்கைகளைப் பரப்பவும் அமைப்புக்கு உதவவும் தமிழ் நிலம் இதழைத் தொடங் கினார். தமிழ் நிலம் என்ற சொல் தமிழகத்தைத்தான் குறிப்பதாகக் கொண்டிருந்தாரா என்பது தெரியவில்லை.

தேசியம் பற்றிய வரையறையில் தெளிவின்றியிருந்தார் என்பதை ஒரு குறையாகக் கூற முடியாது. ஏனென்றால் அதற்குரிய வரையறையை இன்னும் மிகப் பெரும்பாலோரால் வகுத்துக் கொள்ளமுடியவில்லை.

தமிழகத்தில் தேசியச் சிக்கல் ஆழப்புரையோடிப் போயுள்ளது. தேசிய ஒடுக்குமுறையின் உள்ளடக்கமான பொருளியல் ஒடுக்குமுறை மிக மறைமுகமாகவும் மென்மையாகவும் மயங்க வைக்கும் முழக்கங் களின் பின்னணியிலும் நடைபெறுவதால் அதனை வெளிப்படையாகப் புரிந்து கொண்டு எதிர்ப்புக் கோட்பாடு ஒன்றை வகுக்க எவராலும் இயலவில்லையாயினும் இந்தத் தேசிய ஒடுக்குமுறைச் சூழலை இங்குள்ள மக்கள் தன்னுணர்வின்றியே புரிந்து கொண்டுள்ளனர். எனவே பழையவர்கள் விலகினாலும் மீண்டும் மீண்டும் புதியவர்கள் ‘தென்மொழி’யை மொய்த்தார்கள்.

இப்படிப்பட்ட குழப்பமான நிலையில் பொதுமை இயக்கத்தினர், அதிலும் மூன்றாம் அணி என அறியப்படும் மா.இலெ. குழுவினர் தங்களுக்கு இளைஞர்களைப் பிடிப்பதற்குத் திராவிடர் கழகத்துடன் ‘தென்மொழி’ இயக்கத்தையும் ஒரு மூலவளமாகக் கொண்டனர். இவ்வாறு கொண்டு செல்லப்பட்ட தமிழுணர்வும், தமிழக விடுதலை வேட்கையும், தமிழகக் குமுக மாற்ற நாட்டமும் கொண்ட இளைஞர்கள் மா.இலெ. இயக்கங்களின் தலைவர்களின் வழிகாட் டலால் எவ்வகை மக்கள் பின்னணியும் பாதுகாப்பும் பெறாத நிலையில் நடுத் தெருவில் கொண்டு விடப்பட்டு அவர்களில் கணிசமான தொகையினர் காவல் துறையினால் நாய்களைப் போல் சுட்டுக் கொல்லப்பட்டனர். அவ்வாறு கொல்லப்பட்டவர்களைப் போல் பல மடங்கு எண்ணிக்கையினர் செயலிழந்து போயினர். எனவே இந்த நிகழ்ச்சியை எம்போன்றோரால் தவறான வழிகாட்டல் என்று ஒதுக்கித் தள்ளமுடியவில்லை. திட்டமிட்ட அழிம்பு வேலை என்றே ஐயுற வேண்டியுள்ளது. அது மட்டுமன்று இந்த அழிம்பு வேலைக்கு இரையான இளைஞர்களில் கிட்டத்தட்ட அனைவருமே பிற்படுத் தப்பட்டோரும் தாழ்த்தப்பட்டோருமே என்பது இதிலுள்ள கொடிய உண்மை.

இந்நிகழ்ச்சிக்குப் பின் தமிழகத் தேசியப் போராட்டத்தை ஏற்றுக் கொண்ட பின்னும் மக்களைத் தங்கள் பால் ஈர்க்காதது மட்டுமன்று.

அயற்படவும் வைக்கும் பழைய ஆசான்கள் வகுத்துத் தந்த கோட்பாடுகளையும் செயல் திட்டங்களையும் நடைமுறைகளையும் பின்பற்றியதால் தமிழரசன் போன்ற வீறுமிக்க போராளிகளும் முன்னவர்களின் துயர முடிவையே எய்தினர்.

இன்று மார்க்கிய இலெனினியக் குழுக்களிலிருந்து தமிழகத் தேசிய, சாதிய ஒடுக்குமுறை எதிர்ப்புக் குரல்கள் எழுவதற்கு, தங்கள் போலி மார்க்சியத் தலைவர்களை உதறிவிட்டு வெளிவந்த முன்னாள் 'தென்மொழி'க் குழுவினர் தாம் காரணம். இருப்பினும் கோட்பாட்டளவில் தமிழகத் தேசியப் போராட்டத்துக்கும் தமிழகத்தில் நிலவும் சாதிய ஒடுக்குமுறை ஒழிப்புக்கும் இடையிலுள்ள இயங்கியல் உறவைப் புரிந்து கொள்ளாமல் இரண்டையுமே வெற்று முழக்கங்களாகவே இவர்கள் இன்று வரை வைத்துள்ளனர்.

இவ்வாறு பாவலரேறு அவர்களை நாடிச் சென்ற உள்ளங்கள் எண்ணிலடங்கா. அவர்களைச் சிதறாமல் வைத்துத் தமிழகத் தேசியத்துக்கேற்ற ஒரு செயற்திட்டத்தை வகுத்துச் செயலாற்ற முடிந்திருக்குமாயின் அவரது குறிக்கோள்கள் இதற்குள் நிறைவேறியிருக்கும் என்று கூற முடியாது; ஏனென்றால் இந்தக் குறிக்கோளை அடைய நாம் எதிர்கொள்ள வேண்டிய தடைகள் மிகக் கடுமையும் கொடுமையும் வாய்ந்தவை; போராட்டமும் நீண்ட நெடியதாயிருக்கும். ஆனால் அந்தப் பாதையில் குறிப்பிட்ட அளவு முன்னேறியிருக்க முடியும்.

ஆனால் காலம் அவ்வாறு அமையவில்லை. பாவலரேறு அவர்களின் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொள்ள அலையெனத் திரண்டிருந்த உள்ளங்கள் தங்கள் கனவுகளும், குறிக்கோள்களும் திசையறியாமல், நடுக்கடலில் நிற்பதைக் கண்டு கலங்கியவையே. அக்கனவுகளுக்கு வேறெந்த பற்றுக் கோடும் இல்லாத நிலையில் அக்கனவுக்களுக்கும் குறிக்கோள்களுக்கும் ஒரே அடையாளமாக விளங்கிய ஐயா பெருஞ்சித்திரனார் அவர்களின் திருவுருவை இறுதியாகக் காண்பதன் மூலம் தங்கள் கனவுகளையும் குறிக்கோள்கலையும் மீண்டும் வலிமையேற்ற வந்து மொய்த்தவையே.

தமிழகத் தேசிய ஒடுக்குமுறை ஒரு கண்ணோட்டத்திலிருந்து பார்த்தால் 1800 ஆண்டுகள் பழமையானது. அத்தேசிய உணர்ச்சியையும் எழுச்சியையும் வெளிவிசைகளும் உள்விசைகளும் திசை திருப்பி மக்களை ஒருவரோடொருவர் மோதவிட்டுச் சிதைத்து வைத்திருக்கின்றன. அதே விசைகளும் மேலும் மேலும் புதிதான விசைகளும் அதே வகையான குழப்பங்களைப் புகுத்தி வருகின்றன. தேசியத்தின் மீது உண்மையான பரிவும் பற்றும் உள்ள சிலரும் தம் அறியாமையாலும் திசைமாறிய உணர்ச்சிக் கொந்தளிப்புகளாலுங் கூடத் தங்களை அறியாமலே, தங்களுக்கு இயல்பான தெளிவையும் மீறி இக்குழப்ப

மூட்டும் பணிகளைச் செய்து வருகின்றனர்.

ஆனால், தமிழகம் என்றுமே தோற்றதில்லை. கடந்த 1800 ஆண்டுகளாக அது தன் அடையாளத்தையும் தேசிய ஓர்மையையும் கட்டிக் காத்து வந்துள்ளது. ஆனால் இன்று போல் அது தன் தேசியக் குறிக்கோளை ஐயந்திரிபின்றி வெளிப்படையாக அடையாளங் கண்டதில்லை. எனவே அத்தேசியக் குறிக்கோளை, அதற்குரிய கோட்பாட்டை வகுத்தும் அதனடிப்படையில் செயல்திட்டம் ஒன்றை வரையறுத்தும் அவற்றினடிப்படையில் இயக்கமொன்றைக் கட்டியும் எய்தும் நாள் தொலைவில்லை.

அவ்வாறு தமிழகம் தன் தேசியக் குறிக்கோளை நோக்கி நடைபோடும் போதும் அதை எய்திய பின்னரும் அத்தேசியக் குறிக்கோளுக்காகப் பாடுபட்ட நேர்மையான தலைவர்களில் கால வரிசையில் முதலாவதாக ஐயா பாவலரேறு பெருஞ்சித்திரனாரே நிற்பார்.

தமிழகத் தேசியம் என்ற ஒன்றுக்காகப் பாடுபடுவதாகத் திராவிட இயக்கத்தை இத் தமிழக மக்கள் நம்பினார்கள். ஆனால் அவ்வியக்கம் தன்னலத்திற்காகப் பொய் பேசி இம்மக்களை ஏமாற்றிவிட்டது என்று இன்று அனைவருக்கும் புரிகிறது. அவ்வியக்கம் வீசியெறிந்துவிட்ட தமிழகத் தேசியக் குறிக்கோளைப் பொன்னே போல் போற்றி எண்ணற்ற இளைய தலைமுறையினரின் உள்ளங்களின் மீது அழுத்தமாக அமர்த்தி வைத்துவிட்ட பாவலரேறு அவர்களின் மிகப் பெரும் பணி காலத்தால் அழியாதது. அதற்காக அவர் தம் உயிரையே தேய்த்துக் கொண்டார். அத்தகைய அரிய அந்தத் தமிழகத் தேசியத்தை அதன் திசையறிந்து இலக்கு நோக்கி எடுத்துச் செல்வோம்.

நன்றி : 'நிகழ்'

தென்மொழி

தூயதமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.
(ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.)

ஆண்டுக்கட்டணம்	உருபா.	48.00
அரையாண்டுக்கட்டணம்	உருபா.	24.00
தனியிதழ்	உருபா.	4.00

வெளிநாட்டுக் கட்டணம்

1. வானூர்திவழி ஆண்டுக்கட்டணம் – 300/-
2. கப்பல்வழி ஆண்டுக்கட்டணம் – 200/-

சிறை வாழ்வின் இரு நாட்கள்

(பாவலரேறு நாட்குறிப்பு முன்னிதழ்த் தொடர்ச்சி)

18.11.65 வியாழன் (2-ஆம் நாள்)

திடுமெனக் கண் விழித்துப் பார்க்கையில் இருட்டாக இருந்தது. வெளியில் காவலர்களின் காலுறை ஒலி சரக் புரக் என்று ஓயாமல் கேட்டுக் கொண்டேயிருந்தது. என்னைப் பற்றி யாரோ கேட்பது என் காதுகளில் விழுந்தது. நான் புதிதாக வந்ததாகவும், மாவட்ட நடுவரின் ஆணையின் மேல் எனக்குப் போர்வை, புத்தகங்கள் கொடுக்கப் பெற்றன என்றும் காவலர் ஒருவர் வேறொருவருக்கு விளக்கிக் கொண்டிருந்தார். இதிலிருந்து வந்தவர் காவலர்க்கு மேற்பார் வையாளர் என்று அறிந்து கொண்டேன். சிறிது நேரத்தில், அண்மையில் உள்ள தண்டலர் அலுவலகத்திலிருந்து மணி மூன்று அடித்தது. என்னால் தூங்க முடியவில்லை. உடனே எழுந்தேன்.

நேற்று பாவாணருக்கும், பன்னீர்செல்வத்திற்கும் அம்மாவுக்கும் செய்தியைத் தொலைவரி வழி அறிவிக்கச் சொல்லி இருந்தேன். அத்தொலைவரி கிடைத்து அம்மாவும் பன்னீருடன் இன்று காலை 10 மணிக்கு மேல் வருவர் என்று எதிர்பார்த்தேன். காலை 6 மணிக் கெல்லாம் காவலர் தலைவர் வந்து நான் வெளியே போய்க் காலைக் கடன்களை முடித்துக் கொள்ளலாம் என்றும் அதன் பின்பே மற்ற சிறைக் குற்றவாளிகளைத் திறந்து விட வேண்டும் என்றும் எனக்குக் கூறினார். என்னைப் பார்க்க வருபவர்களுக்கு அவர்கள் இசைவு கொடுத்தால் போதுமென்றிருந்தேன். வருபவர்கள் நான் எப்படி யிருக்கின்றேன் என்று பார்க்க விரும்பியது போலவே என் பரிவு அவர்களை எந்த அளவு வாட்டியுள்ளது என்று அறிய விரும்பி னேன்.

நேற்று இரவு விழித்திருந்து 'செந்தமிழ் தந்த சிறை' என்ற பாட்டை எழுதிச் செயபதி வழித் தங்கப்பாவிடம் சேர்க்கச் சொல்லியிருந் தேன். ஏறத்தாழ 10.30 மணியளவில் பன்னீரும் அம்மாவும் வந்தனர்.

அன்னையார் வரும்பொழுதே ஓலமிட்டு அழுதவாறே வந்தார். இந்நிலை நானே விரும்பியேற்றுக் கொண்டதென்றும், நடுவர் நமக்குப் பரிவாகவே தண்டனை கொடுத்துள்ளாரென்றும், இந்நிலையால் அவருக்குப் பெருமை யென்றும் கூறித் தேற்றினேன். அவர்கள் எளிதில்

அடங்குவதாக இல்லை. அவர்கட்டுப் பின் கமலாவும் தங்கப்பா, தங்கம் இவர்களும் வந்து பேசிக் கொண்டிருந்தனர். பிள்ளைகளையெல்லாம் கவனித்துக் கொளளும்படியும், உடலை நல்ல முறையில் வைத்துக் கொள்ளும்படியும் கமலாவுக்குக் கூறி அனுப்பி னேன்.

உணவுக்குப் பின் எல்லாரையும் அனுப்பிவிட்டுச் சிறிது தூங்கினேன். திருக்குறளை ஒவ்வொரு குறளாக ஆய்ந்துவிட முடிவு கட்டியுள்ளேன். முதலதிகாரத்தில் சில குறட்பாக்களைப் பார்த்தேன். என் மாறுபட்ட கருத்துகளை நூலின் ஓரமுள்ள வெற்றிடங்களில் குறித்து வைத்தேன்.

இரவு சுவரொட்டியை எழிலேந்தி கொண்டு வந்திருந்தார். உள்ளூர் செய்தித்தாளான தினக்கதிரில் என்னைப் பற்றிய செய்தி வந்திருந்தது. இன்று இரவு நெடுநேரம் படித்துக் கொண்டும் எழுதிக் கொண்டும் இருந்தேன். நான் கேட்டனுப்பிய இந்தக் குறிப்புச் சுவடி வந்து விட்டதால் இந்த நான்கு மாதப் பொழுதில் ஒவ்வொரு நாளும் நடைபெறும் நிகழ்ச்சிகளை ஒன்று விடாமல் எழுதிவர முடிவு செய்தேன். இரவு நன்றாகத் தூங்கினேன்.

19.11.65 வெள்ளி (3-ஆம் நாள்)

நான் சொல்லிய ஏற்பாட்டின்படி இன்று காலை மாவட்டத் துணை மருத்துவத் தலைவர் சிறைக்கு வந்திருந்தார். என்னை அவரிடம் கூட்டிப் போனார்கள். என்னைப் பார்த்தவுடன் அவர் அடையாளங் கண்டு கொண்டார். எனக்கு நெஞ்சுவலியும், காற்றுத் தொல்லையும் இருப்பதாக எழுதிக் கடலூர் அரசினர் மருத்து வமனையில் சேர்க்கும்படி எழுதி அனுப்பினார். என்னைப் பார்ப் பதற்கு வெளியில் அன்னை, மனைவி, தம்பி, பன்னீர், இலெனின் முதலியோர் நின்று கொண்டிருப்பதாகவும் ஒருவரையும் உள்ளே விட மறுப்பதாகவும் காவலர்கள் கையூட்டு கேட்பதாகவும் செய்திகள் கிடைத்தன.

10.30 மணி வரை காவல் மூடு வண்டி வரவில்லை. அதற்குள் மருத்துவமனை செல்லும் பிற குற்றவாளிகளை மட்டும் வந்த காவலர் களுள் அறுவர் இட்டுக் கொண்டுபோய் மீண்டும் கொண்டு வந்து சேர்த்தனர். எனக்காகக் காத்துக் கொண்டிருந்த இருவர் மட்டும் 'ஏன் நடந்து போகக் கூடாதா? நடந்தால் என்ன? மூடு வண்டி இப்பொழுதைக்கு வரப்போகிறதில்லை' என்று பலவாறு முணுமுணுத்த வண்ணமாகக் கூறி அலுத்துக் கொண்டிருந்தனர்.

சரியாக 11.30 மணிக்கு மருத்துவமனை போய்ச் சேர்ந்தேன். அங்கு என்னைப் பொதுவான படுக்கையறையிலேயே தங்க வைத்தனர். எனக்குச் சிறப்பான இடம் ஒதுக்குமாறு மருத்துவர் குறிப்பிடவில்லை என்று காரணம் கூறினார். நானும் இசைந்து அங்குத் தங்கினேன்.

மருத்துவமனையிலும் எனக்குக் காவலாக ஒரு தனிக் காவலர் இருந்தார். அவர் என் படுக்கையின் அண்மையிலேயே வேட்டெஃகத்துடன் இருந்தார். அவர் போல் ஒவ்வொருவரும் மூன்று மணி நேரத்திற்கு ஒரு முறை வந்து நின்றனர்.

நான் எங்குப் போனாலும் என் அருகிலேயே தொடர்ந்து வரும்படி அவர்களுக்குக் கட்டளையாம். நான் பிறருடன் பேசவே கூடாதாம். எனக்காக எந்தக் காவலராவது பரிவு காட்டப் போகின்றனர் என்றறியவும், என்னுடன் வந்து போவார்களைக் குறிப்பெடுத்துக் கொள்ளவும் பல ஒற்றர்களை அரசினர் வைத்துள்ளதாகவும் காவலர்கள் சிலர்வழி அறிந்தேன்.

சிறைக்குப் போய்ச் சேர்ந்ததும் எழிலேந்தி, நாமதேவன், நக்கீரன் இவர்களுடன் அன்னையும் துணைவியும் வந்து நெடுநேரம் பேசிவிட்டுச் சென்றனர். இப்படிச் செல்வதற்குக் காவலரின் தனிப் பார்வை வேண்டியிருந்தது. அதன்பின் அவர்கள் எல்லாரையும் மாலை வரும்படி கூறினேன்.

ஒரு நோயும் இல்லாதவன்கூடத் தனக்கு ஏதாவது ஒரு நோய் இருப்பதாகக் கூறுவானாகில் அதனை எல்லாரும் நம்பிப் பண்டுவம் செய்யும் வியப்பான போக்கை நான் மருத்துவரிடம் கண்ட பொழுது போலித் தனமான செய்கைகளும் மேலோட்டமான அறிவும், ஆரவார நாகரிகமும் நம் மக்களிடமும் கற்றவர்கள் என்று கூறப் படுவாரிடமும் எந்த அளவில் குடி கொண்டுள்ளன என்று கண்டு உள்ளங் கவன்றேன். நான் எந்த ஒரு நோயும் இல்லாதவனாக இருந்தும் என் வாயுரை ஒன்றே கொண்டு எனக்கு நோய்கள் உள்ளவாகக் கருதினர். இந்த நிலையில் உண்மையான பல்லாயிரக் கணக்கான நோயாளிகள் பேணுவாரின்றி வெட்டவெளிகளிலும் குடிசைகளிலும் தனித் தனியே கிடந்து மடிவதை எண்ணி வருந்தினேன். வரி கொடுக்காதவனை அரசினர் வற்புறுத்தியும் அச்சுறுத்தியும் வரி வாங்குவது போல, அவர்களின் நலங்களைப் பொறுத்த மட்டில் அந்த அக்கறை காட்டினால் என்ன? அதிகார வரம்பில் கீழ்நிலையில் உள்ளவர்களிலிருந்து மேல் நிலையில் உள்ளவர்கள் வரை ஒவ்வொருவரிடமும் உள்ள அதிகாரங்களை எல்லாரும் தவறாகவே பயன்படுத்தி வருவதாக எனக்குப் பட்டது. அவ்வதிகாரங்களைச் செவ்வையாக அவை கொடுக்கப்பட்டுள்ள காரணங்களுக்காக மட்டுமே நேரிய முறையில் செல

விடுவார்களானால் எந்தத் துறையிலும் எந்தக் கோணத்திலும் தாறுமாறான செயல்கள் நடக்கவே வழியில்லாமற் போய்விடுமல்லவா? இதைப் பற்றி எந்த அரசியல் சீர்திருத்தக்காரராகிலும், அதிகாரி யாகிலும் எண்ணிப் பார்ப்பதாக எனக்குப் படவில்லை. அதிகார முறைகளில் குறுக்கு நுழைவும், மறைமுக ஊடுருவல்களும், ஏற்படு வதற்குத் தடையாக எங்கோ ஒரு சிலரே இருப்பதாகத் தெரிகின்றது. ஆனால் அவர்களும் மற்ற மேலதிகாரிகளின் வல்லதிகாரங்களின் தவறான போக்கில் இணைந்து பயனற்றுப் போகின்றனர்.

இவ்வுண்மையைக் காவலர்களிடமும் மருத்துவப் பணியாளர் களிடமும் வெளிப்படையாகக் கண்டு வருந்தேன். ஒரு காவலரும், தலைமைக் காவலரும் சேர்ந்து கொண்டு அவர்களின் துணை நோட் டகர் மேல் பல குறைகளைச் சொல்லி மனம் உழன்றனர். ஆனால் அவர்கள் கூறிய குறைகளில் பெரும்பாலன, தங்கட்கும் அக்குறைபாடு களால் வரும் பயனைப் பகிர்ந்து கொடுக்காமைப் பற்றியனவாகவே இருந்தன. இவர்களின் இம் மனப் போக்கை எளிதில் மாற்றவே முடியாது போல் எனக்குப் பட்டது. அதன் பின் தலைமைக் காவலர் அவ்விடத்தை விட்டு நகர்ந்தார். வேறொரு காவலர் முன்பிருந்த காவலருடன் வந்து சேர்ந்தார். அதன்பின் இருவரும் சேர்ந்து அங்கிருந்து போன தலைமைக் காவலரின் அட்டூழியங்களைப் பற்றி மிகுவாகப் பேசினர்.

மருத்துவ மனைக்கு வந்த பின் என்னைச் சுற்றியிருந்த காவல் மூட்டம் ஒருவாறு விலகியது. என்னோடு வந்த அன்னையாரையும் நண்பரையும் போகவிட்ட பின் எனக்கு ஒரு நோயாளிக்குத் தரவேண்டிய உணவு தரப் பெற்றது. அதன்பின் சிறிது நேரம் எழுதி விட்டுக் கண்ணயர்ந்தேன்.

மாலை அன்னையாரும் மனைவியும் குழந்தைகள் எல்லாருடனும் வந்தனர்.பேச்சுக்கிடையில் அன்னையாரிடம் தென்மொழிக்குப் பொறி வந்திருப்பதாகவும், அதற்கெனத் திரட்டிக் கொண்டுள்ள தொகை இன்னும் முழுமையாகச் சேரவில்லை என்றும் எனவே எனக்கு உருபா 3000 தரவேண்டுமென்றும் இதனை நான் பிப்ரவரி, மார்ச்சு திங்களுக்குள் திருப்பிக் கொடுத்து விடுவேன் என்றும் கூறிக் கேட்டேன். அன்னையார் தம்மிடம் இப்பொழுது வருந்தொகை ஏதும் கையிருப் பாக இல்லையென்றும், வேண்டுமானால் ஒரு கிழமைக்குள் புரட்டித் தருவதாகவும் உறுதி கூறினார்கள். இது பற்றி உடனே தந்தையார்க்கு மடல் எழுதி இன்றைய அஞ்சலிலேயே விடுக்கும்படி வேண்டிக் கொண்டேன். மாலை 6 மணி வரை எல்லாரும் பேசியிருந்து விட்டு வீடு சென்றனர்.

o

உண்மையும் நேர்மையும்

-த. அன்பழகன்

'இனியார் என் சொலினும் இன் சொல்லே' - என்று ஐயா அவர்கள் அடிக்கடி ஓதுவார்கள். அந்த இனியவரின் கடு மொழி களால் (அறியாமை நீங்கத்) துவைத்து எடுக்கப்பட்டவருள் நானும் ஒருவன், என் தந்தையிடம் பட்டது போல! அச் சான்றோரைப் பற்றி எழுதுவதற்கு எனக்குள் கூச்சம் எழுகிறது; தயக்கம் இருக்கிறது. என் சொந்தத் தந்தையைப் பற்றி எழுதுவதாகவே எனக்குப் படுகிறது. தென்மொழிக் குடும்பத்து உறுப்பினனாகவே இன்னும் கருதிக் கொணடு இருக்கிறேன்.

தென்மொழி அலுவலகக் கணக்கராகவும்; பொறுப்பு அமைச் சராகவும் ஏறத்தாழ 5 ஆண்டுகள் மட்டும் கடலூரில் பணியாற்றிய வகையில் பெற்ற உணர்வுகள், அறிவுத் தாக்கங்கள் ஏராளம்! 'வான் பெயரினும் தான் பெயரா'க் கொள்கை உறுதி கொண்ட அந்த உரவோறின் உண்மை, நேர்மை, செயல், கொள்கை பற்றி எடுத்துக் காட்டாக ஒன்றிரண்டு மட்டும் சுட்ட விழைகிறேன்.

ஒவ்வொரு நாளும் பணவிடை வருவதைப் பொறுத்துத் தான் அன்றாட வேலை தொடங்கும். அஞ்சல் காரார் இயல்பாக வருவதற்கு நண்பகல் ஆகும். அதுவரை பொறுக்க முடியாது. எனவே காலை 8.00 மணிக்கே மஞ்சக்குப்பம் அலுவலக வாயிலில் காத்துக் கிடப்பேன். பணம் வந்தால் அஞ்சல்காரரர் பணமும் பணவிடைத்தாளும் கொடுத்து விடுவார்.

பணம் போதுமான அளவு வந்தால் தாள் வாங்க ஏற்பாடு செய்யப் படும். அச்சடிப்பு வேலை நடவாமல் தொடருமானால் அச்சுக் கோப் பவருக்கு விடுப்புக் கொடுக்க நேரிடும்.

எத்தனையோ நாள்கள் கோப்பாளர், பொறி இயக்குநர், வராமல் இருந்ததுண்டு. அதற்காகப் பணிகள் என்றும் நின்று போகா. ஐயா அவர்களே அச்சும் கோப்பார்கள். கோத்ததைச் சட்டத்தில் முடுக்கு வார்கள். அச்சுப் பொறியில் ஏற்றி அச்சிடுவார்கள். அட்டைப்பட மென்றால் வண்ண மை குழைத்து வைப்பார்கள். படிவம் மடிப்பார் கள்; பொத்தகம் தைப்பார்கள்; வெட்டுவார்கள்; கட்டடம் செய்வார் கள். தென்மொழிக் குடும்ப உறுப்பினர் அனைவருமே ஒவ்வொரு வேலையில் ஈடுபடுவார்கள்.

முற்றும் பணமே வராத காலமும் உண்டு. கடன் வாங்க முடியாத நிலையும் வந்ததுண்டு. அப்போதும் சோர்ந்துவிட மாட்டார்கள். ஊழியர்களுடனும், குடும்ப உறுப்பினர்களுடனும் தாயம் விளையாடித் துன்பம் தணித்த காலமும் உண்டு.

இவ்வாறு வறுமையில் துன்புற்ற காலத்தும் மொழிஞாயிறு பாவாணர் ஐயா அவர்கள் தென்மொழி இல்லம் வர நேர்ந்த போதெல் லாம் சிறப்புணவு வழங்கத் தவறியதில்லை. அப்போது சிறுமியாக இருந்த தங்கை பிறைநுதலுக்கும் கொடுக்காமல் பாவாணருக்கு மட்டும் கொடி முந்திரிப் பழம் கொடுத்ததுண்டு. அழுக்கடைந்திருக்கும் பாவாணரின் காருடம்பைத் (முல்லைவாணன் போன்றோர் துணையு டன்) தேய்த்துக் குளிக்க வைப்பார்கள்.

தமிழக விடுதலைக் கொள்கையைப் பரப்பத் திருச்சியில் மாநாடு நடத்தினார்கள். உணர்வைத் தாக்கும், கேட்டார்ப் பிணிக்கும் உரையில் காவல் துறையினரும் எழுச்சியுறக் கண்டேன். அந்தக் காலக் கட்டத்தில் அரசு உளவுத் துறையினர் தொல்லை தந்ததுண்டு. அவரே தென்மொழிக்கு உளவு சொன்னதும் உண்டு. மாநாடு முடிந்த பின்பு 3 மாதமாகத் தென்மொழி வெளியிட முடியவில்லை. மிகுந்த பணத் தட்டுப்பாடு. அப்படி இருந்தும் மீண்டும் மதுரையில் தென்மொழிக் கொள்கைச் செயற்பாட்டு மாநாடு நடத்த முனைந்து சிறைப்படுத்தப் பட்டார்கள், தமிழக விடுதலை உயிரென முழங்கியதால்!

நான் 'தென்மொழி'யை முதன் முதலில் பார்த்ததே தஞ்சைப் பொது நூலகத்தில் தான்! பின்பு தி.மு.க. ஆட்சியில் நிறுத்தப்பட்டுவிட்டது. (இந்தி எதிர்ப்புப் போராட்டக் காலத்தில், ஐயா அவர்களின் அறிக்கை, தம் நெஞ்சை நடுங்கச் செய்ததாக வழக்குமன்ற நடுவரிடம் சொன்ன அன்றைய முதல்வர் பக்தவத்சலம் கூடத் தென்மொழியை நிறுத்தவில் லை.) இவ்வாறு இருந்தும் திரு. ம.கோ. இராமச்சந்திரன் தி.மு.க.வை விட்டு விலக்கப்பட்டதும் தமிழகத்தில் ஏற்பட்ட நிலைக்கு வருந்தி னார்கள். பேராசிரியர் இலக்குவனார் அவர்கள், "கலைஞருடன் சந்திக்க நான் ஏற்பாடு செய்கிறேன். நீங்கள் ஒன்றும் (தென்மொழியை நூலகத்தில் போட வைப்பது) சொல்ல வேண்டாம். மற்றவற்றை நான் பார்த்துக் கொள்கிறேன்" என்று அழைத்த போது கூட உடன்படாத- தமிழ்நிலம் ஒன்றையே கட்டிக் கொண்டு பின்னிக் கிடந்த பாவலரேறு ஐயா அவர்கள், "கலைஞரைப் பார்த்து ஆறுதல் சொல்ல சென்னை செல்லலாமா, தம்பி?" என்று கருத்துக் கூறுமாறு என்னிடமும் கேட்டார்கள்.

அப்போதும் வறுமைக் காலம் தான்! சென்னை வழிச் செலவுக்குப் பணம் புரட்ட 3 நாள்கள் ஆயின. சென்னை சென்று 3 நாள்கள் தங்கிய பின்னரே கலைஞரைச் சந்திக்க நேரம் கொடுக்கப்பட்டது. முதல்வர் கலைஞர் இருக்கையை விட்டு எழுந்து முன்னே நடந்து வந்து ஐயா அவர்களின் இரு கைகளையும் பற்றி வரவேற்று அமரச் செய்ததாக மகிழ்ந்து சொன்னார்கள். நேருரை பெற்று வெளியிட்டார்கள்.

“அருட் செல்வர் ஆட்சியை அரணிட்டுக் காக்க” - என்று அட்டைப் பாடல் எழுதித் தி.மு.க.வின் போலி ஆரவாரத் தன்மையைப் பல முறை கண்டித்தும் எழுதியிருக்கிறார்கள். திரவிடச் சேரன், திரவிடச் சோழனை கரவடம் கொண்டு கழுத்தறுப்பதைச் சுட்டினார்கள்.

தி.மு.க. ஆட்சியில் இல்லாத போது ‘முரசொலி’ சில காலம் நிறுத்தப் பட்டது. கலைஞரை நேரில் சந்தித்து, “முரசொலியில் மட்டுந்தான் உங்கள் பேச்சு வருகிறது. அது நின்று போனால் ஆரியப் பார்ப் பனர்க்குக் கொண்டாட்டமாக இருக்கும். தமிழன் வீழ்ந்ததாக நினைப் பார்கள்” - என்றெல்லாம் சுட்டிக்காட்டி மீண்டும் முசொலியை வரவைத்தார்கள். எல்லாம் இன நலம் எண்ணித்தான்.

அடுத்து தி.க. பொதுச் செயலாளர் வீரமணி முதலான சிலர் கலைஞருக்கு எதிராக அறிக்கைப் போர் செய்த போது, ஒரு தென்மொழி இதழின் பொரும்பாலான பக்கங்களை நிரப்பி எழுதிக் கலைஞருக்கு முட்டுக் கொடுத்தார்கள். தமிழின நலம் கருதி. என்னே அவர்தம் அருள் உள்ளம்!

பாவாணரின் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலி வெளி யிடத் தென்மொழி வாயிலாகத் திட்டம் தொடங்கிப் பின்பு அதைத் தி.மு.க. அரசு கைக் கொள்ளவும் காரணமாக இருந்தார்கள்.

முன்னாள் முதல்வர் ம.கோ.இரா. மறைவு இருள் விலக்கம் என்றும், இந்திரா காந்திக்கும், இராசீவ் காந்திக்கும் அறம் பாடியும்; தனுவுக்கு வாழ்த்துப்பா பாடியும்; தமிழீழ விடுதலைப் புலிகள் தடை செய்யப் பட்ட போது, “இதோ இருக்கின்றேன் விடுதலைப் புலிகள் ஆதரவாளன்” - என்று நெஞ்சை நிமிர்த்தி முழங்கியும் தமிழ் நிலம் வலம் வந்த புலன் அழுக்கற்ற புலவர்தாம் பாவலரேறு ஐயா அவர்கள்!

“அருள் அறம் மறம்சேர் அருந்தமி ழகமே
இருளில் மூழ்கிளை என்றொளிர் வாயோ ?”

செய்திகள்

வெங்காலூர்த் தமிழ்ச் சங்கம்

வெங்காலூர்த் தமிழ்க் கழகத்தின் சார்பில், கடந்த விடை மாதம் 6-ஆம் பக்கல் (19-5-96) ஞாயிறன்று முற்பகல் 10.30 மணியளவில் தமிழ்க் கழக அரங்கில் கழகத்தின் தலைவர் தமிழத்திரு சிவசங்கரனார் தலைமையில் மறைமலையடிகளார் அறக்கட்டளைச் சொற்பொழிவும், தமிழ்ச் சுடர் மு.வரதராசனார் அறக்கட்டளைச் சொற்பொழிவும் நடைபெற்றன.

மறைமலையடிகள் அறக்கட்டளைப் பொழிவாகத் 'தனித்தமிழ்க் கிளர்ச்சி' என்னும் பொருள் பற்றித் திருக்குறள்மணி புலவர் இறைக் குருவனார் உரையாற்றினார். முன்னதாகத் தமிழ்ச் சுடர் மு.வ. அறக்கட்டளைப் பொழிவாகக் 'கள்ளோ காவியமோ' என்னும் பொருள் பற்றி முனைவர் இளங்கோவன் உரையாற்றினார்.

தமிழழகன் - சகுந்தலா மணவிழா

வெங்காலூர்-47 திரு. நாராயணசாமியின் புதல்வன் தமிழழகன், வெங்காலூர்-38 திருவாட்டி சோபனா மதுரையின் புதல்வி சகுந்தலா ஆகியோர் திருமண விழா கடந்த விடை மாதம் 6-ஆம் பக்கல் (19-5-96) ஞாயிறன்று மாலை 4 மணியளவில் திருக்குறள் மணி இறைக் குருவனார் தலைமையில் நடைபெற்றது.

திரு. அருள்மணி வரவேற்புரையாற்றினார். திரு. இறைக்குருவனார் திருமணத்தை நடத்திவைத்து வாழ்த்துரை வழங்கினார். பேராசிரியர் அப்துல்காதர், சட்டமன்ற உறுப்பினர் ஏமாவதி, மேனாள் உறுப்பினர் எம்.முனுசாமி, மாநகராட்சி உறுப்பினர் எம்.ஆர். குப்புராசு ஆகியோர் மணமக்களை வாழ்த்தி உரையாற்றினர். திரு நாராயணசாமி நன்றி நவின்றார்.

மணிவாசகன்-சசிகலா திருமணம்

நெடுநாள் தென்மொழியன்பரும் புரவலரும் புன்செய்ப் புளியம் பட்டி மறைமலையடிகள் மன்றச் செயலாளருமான திரு.கா.இள முருகன் அவர்களின் மகன் செல்வன் மணிவாசகனுக்கும், சிறுமுகைப் புதூர் திரு. நாகமாணிக்கம் அவர்களின் மகள் செல்வி சசிகலாவுக்கும் தி.பி. 2027 விடை 24 அன்று (6.6.96) மேட்டுப்பாளையத்தில் திருமணவிழா நடைபெற்றது. சிவநெறிச் செம்மல் ந.இரா. ஆடலாசு மணநிகழ்ச்சியை நடத்தி வைத்தார். மணமக்களைத் தென்மொழி வாழ்த்துகிறது.



நற்றமிழும் மக்களும் நாடும் தழைத்துரிமை
பெற்றுச் சிறக்கப் பெரிதுழைத்த - முற்றறிவின்
ஆற்றல்சால் பாவல ரேறு தமிழ்க்களம்
ஏற்றமுறச் செய்வோம் இனிது!

தென்மொழி அச்சகம், சென்னை-600 005. (தொலைபேசி எண்: 847829